**கவனிக்க.**- 2007.02.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1485 - 2007 පෙබරවාරි 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2007.02.15

1485 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 100 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 100 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) இலங்கைத் தேசிய நிர்மாணச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, சனவரி மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) இரசாயன ஆயுதங்கள் சமவாயம் சட்டமூலம் 2007, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, பெப்புருவரி 23 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, பெப்புருவரி 09 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வல்பொல, உடுகஹ வல்பொல "அநுராதி" என்ற முகவரியில் வசிக்கும் பேருவலகெ நாளிகா பிரியங்கனி ஆகிய நான் அத்தனகல்ல பிரசித்த நொத்தாரிசு எம். வீ. பிரசாத் நிரஞ்சன் முன்னிலையில் உறுதிப்படுத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 7 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் அத்தனகல்ல, அலவல வீதி, இல. 598 என்ற முகவரியில் வசிக்கும் விஜேசிங்க ஆரச்சிகே ஜயந்த ஜயதிலக என்பவருக்கு வழங்கப்பட்ட அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்வதுடன் இது செல்லுபடி ஆகாது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்குறித்த விஜேசிங்க ஆரச்சிகே ஜயந்த ஜயதிலக என்பவரால் மேற்கொள்ளப்படும் எதுவித நடவடிக்கைக்கும் இனிமேல் பொறுப்பாளியாக மாட்டேன் என்றும் இத்தால் அறிவிக்கின்றேன்.

பேருவலகெ நாளிகா பிரியங்கனி.

2007, சனவரி 30.

2-568

## வெளிநாட்டு அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல்

பொல்கஸ்சோவிட்ட ஹல்பிட்ட தவட்டகஹாவத்த 69 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பிடுகல லியனகே பாலித ஜயரத்ன ஆகிய நான் இத்தால் அறிவிப்பதாவது,- கட்டார் தோஹா இலங்கை தூதுவராக நிர்வாகத்தைச் சேர்ந்த திரு. எம். ரி. எம். சரீம் என்பவரின் முன்னிலையில் பொல்கஸ்ஓவிட்ட ஹல்பிட்ட தவட்டகஹாவத்த 69 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த எனது மனைவியான ஷிரோமி பிரியங்கா விக்கிரமசிங்க என்பவரை எனது அட்டோர்ணியாக நியமனம் செய்த 02.08.2005 ஆந் திகதி கொண்ட வெளிநாட்டு அட்டோர்ணி தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து செல்லுபடியற்ற தாக்குகிறேன். இனி மேற்பட என் மனைவியால் எனது பெயரில் கூறப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை அதிகாரத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன். கூறப்பட்ட அட்டோர்ணி தத்துவம் இன்று தொடக்கம் சட்டரீதியற்றதும் செல்லுபடியற்றதுமாகும்.

பிடுகல லியனகே பாலித ஜயரட்ன.

2-576

# ஏல விற்பனைகள்

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி - மொனராகலை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை*

பதுளை பிரசித்த நொத்தாரிசு பீ. இலங்கன்திலக என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் ஹட்டன் நெஷனல் வங்கியின் பெயரால் எழுதப்பட்டதுமான 1998.10.01 ஆந் திகதியதும் இலக்கம் 6184 முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் ஹவுபே ஹேவாவஸம் கீர்த்திஸேனயும் ஹவுபே ஹேவாவஸம் திலனசிரியும் கடனாளராக தவணை தவறியுள்ளாராதலாலும்; வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி என் மீது அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் கீழே குறிப்பிடும் சொத்து அமைந்துள்ள இடத்திலேயே 2007.03. 05 ஆந் திகதி 11.00 மணிக்கு என்னால் அது பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தின் விவரணம்.**- ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், மொனராகலை எல்லைக்குள், புத்தளம், வெதிரடகோரலே முப்பனேயில் இருக்கும் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எல். கே. குணஸேகர என்பவரால் 1998.03.24 ஆந் திகதி அளந்து வேறாக்கப்பட்ட இலக்கம் 1356 எனும் வரைப்படத்தில் வேறாக்கப்பட்ட லொட் 01 எனும் காணியும் அதிலுள்ள அனைத்து சொத்துக்களும் ஆகும்.

(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 38.4 பே.)

**தீர்மான அறிவித்தலுக்காக.**-2006.10.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.10.31 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏல விற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களை பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணம் 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(5) வேறு செலவினங்கள் ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தப்பட்ட கட்டணம் 2000.

விலைக்கு வாங்கிய பணத்தில் 90% பங்கு பணத்தை 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்; 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய 10% தைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கவும் சொத்தை மீள விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை பத்திரங்களையும் மேலதிக விவரங்களையும் முகாமையாளர் ஹட்டன் நெஷனல் வங்கி கிளை (தொலைபேசி இல. 055- 2276375/055- 2276214) அல்லது கொழும்பு 10, டீ. பி. ஜாயா

மாவத்தை, இலக்கம் 479, பிரதான அலவலகம், பிரதான முகாமையாளர் (கடன் அறவிடுபவர்) தொலைபேசி இல. 2661815, 2661816 ஆம் பெற்றுக் கொள்ளலாம்.

என். எச். பீ. எவ். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும், அதிகாரம்,
பெற்ற ஏலவிற்பனையாளரும்.

இல. 34/31அல்லது 32,
சட்டத்தரணிகள் அலுவலகத் தொகுதி,
கொழும்பு 12.

2-474

---

## றுஹுணு அபிவிருத்தி வங்கி - கன்தர கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

றுஹுணு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் குறிப்பிடுகின்ற சொத்துக்கள் 2007.03.06 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில் வெல்லபட பத்துவை பாதேகமயில் அமைந்துள்ள பஹல கொரடுவ/ கோன்கஹகொரடுவ எனும் காணியை அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட 1998.01.17 ஆந் திகதிய 2590 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம், அளவில் மூன்று றூட் இருபத்திஇரண்டு தசம் ஆறு ஸைபர் பேர்ச்சஸ் (0ஏ. 3றூ. 22.60பே.) எனும் மிகப்பெரிய காணியில் அமைந்துள்ள மரங்கள், பழவர்க் கங்கள், கட்டிடங்கள் போன்றன அனைத்துமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2005.12.23 ஆந் திகதியின் அரச வர்த்தமானப்பத்திரிகையிலும் 2006.12.06 ஆந் திகதியின் "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" போன்ற சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- மாத்தறை திக்வெல்ல வழியாக பெலிவத்த கடைப்பகுதிகளுக்கு அருகே இடப்பக்கமாக விழும் பாதேகம வழியாக 1 கி. மீ. அளவு தூரம் செல்ல தென்படும் "தசசில் ஆராமய" அருகாமையில் வலப்பக்கமாக திரும்பி 300 மீற்றர் அளவு சென்றதும் இச்சொத்துக்கள் தென்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ் குறிப்பிட்ட பணம் கொள்வனவாளரினால் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;

(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% ;

(3) ஏலவிற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையின் 2 1/2% ;

(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூ. 500 ;

(5) விற்பனைச் செலவும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ஆகும்.

கொள்வனவு விலையின் மீதி 75% க்கான பணத்தை ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புரண, அனகாரிக தர்மபால மாவத்தை, இல. 382ஏ இல் அமைந்துள்ள றுஹுண அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் பொது முகாமையாளர்" இக்கு செலுத்த வேண்டும்.

மேலே குறிப்பிட்ட படி 30 நாட்களுக்குள் அப்பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையின் 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும் மீண்டும் சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

உரிமைகோரும் ஒப்பினையையும் வேறும் விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்க. தொலைபேசி இலக்கம் 041-2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த,
(சமாதான நீதவான்)
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரும்
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731.

2-487

---

## டீ. எப். சீ. சீ. வங்கி

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனும் பெயரில் இயங்கி வந்தது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை**

**ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்திலுள்ள, பதுளை, நகர் பிரதேசத்தில் அமைந்திருக்கும் கெந்தலகமவில் உள்ள 'பெரமஸ் கும்புர' என அழைக்கப்படும், பிரித்து வரையறுக்கப்பட்ட அனுமதிப் பத்திரமுடைய நிலஅளவையாளர் எம் புவாட் இஸ்மாயிலினால் 25.07.1994 ஆந் திகதியிடப்பட்ட 4248 ஆம் இலக்க காணி வரை படத்தில் 6 ஆவது இலக்க காணித்துண்டு கட்டங்களுடனும் அதில் அமைந்துள்ள அனைத்துடனும் வீதியை சுதந்திரமாகப் பயன் படுத்தும் உரிமையுடன்**

**(காணியின் பரப்பு : 0ஏ. 0றூ. 14.5பே.)**

*(9842 மற்றும் 11076 இலக்க அடைமான பிணை உறுதிகளின் மூலம் அடகுவைக்கப்பட்ட சொத்து)*

பதுளையைச் சேர்ந்த ஜயமஹா முதலிகே தொன் சார்ள்ஸ் ஜயந்த என்பவரால் பதுளையைச் சேர்ந்த நொத்தாரிசு ஐ. எம். பி. ஆனந்தவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 7 ஆம் திகதி 9842 ஆம் இலக்க 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதிய 11076 ஆம் இலக்கம் ஆகிய பிணை உறுதிகளால் டீ. எப். சீ. சீ. வங்கியில் அடையாளம் வைக்கப்பட்டு மீளளிக்கப்படாததால், டீ. எப். சீ. சீ. வங்கியினால் எமக்கு அளிக்கப் பட்ட அதிகாரத்தின்படி 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய உள்ளூர் அதிகார வரி 1% ;
(3) விற்பனை விலையின் ஏலதார் தரகு 2.5% (இரண்டரை வீதம் மாத்திரம்) ;
(4) விளம்பரச் செலவான ரூபா 26,000 வை மொத்தமாக ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(7) விற்பனைச் செலவு மற்றும் வேறு ஏதாவது கட்டணங்கள் இருப்பின்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங் களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 011- 2440366 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீ. எப். சீ, சீ. வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
ஐஎஸ்ஓ 9001 : 2000 சான்றுப்படுத்தப்பட்ட
கீர்த்திவாய்ந்த முன்னணி பட்டய ஏலதாரர்கள்,
இலங்கையில் ஆலோசகர், மதிப்பீட்டாளர்கள்
மற்றும் ஆதன முகவர்.

*தலைமை அலுவலகம் :*
24, டொரிங்டன் வீதி,
கண்டி
தொலைபேசி : 081-2227593
தொலைபேசி/
தொலைநகல் : 081-2224371

*நகர அலுவலகம் :*
290, ஹவ்லொக் றோட்,
கொழும்பு 05
தொலைபேசி : 011- 2502680,
011- 2585408,
தொலைபேசி/
தொலைநகல் : 011- 2588176
ஈ-மெயில் :
sameera@sri.lanka.net

2-490